**புத்தசாசன நிதியம் - 2013**

புத்தசாசன நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, நிதிய மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 1990 இன் 35 ஆம் இலக்க புத்தசாசன நிதிய அதிகாரச்சட்டத்தின் 12(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமை பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வினை அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகை, வருமானச் செலவினக் கணக்கு நிதிய மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நிர்ணயிக்க என்னால் முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 215,690 கிரயத்திலான தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அச்சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலத்தை கணிப்பீடு செய்து பெறுமானத்தேய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2. கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்காக வருடாந்தக் கணக்குகளை தயாரிப்பதற்காக தனியார் கம்பனியொன்றுக்கு மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 100,000 தொகையை முன்னைய ஆண்டில் சீராக்கம் செய்யாமல் ஆண்டின் செலவீனமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் ரூபா 20,559,930 தொகை நன்கொடையாக நிதியத்திற்கு கிடைத்திருந்ததுடன், அதில் ரூபா 20,354,829 தொகை நன்கொடையாளரின் வேண்டுகோளின் பேரில் தனியார் அமைப்பொன்றிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. இந்நன்கொடை பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகள் வருமானச் செலவினக் கணக்கில் முறையே வருமானம் மற்றும் செலவினமாக வெவ்வேறாக காண்பிக்கப்பட்டிருக்க வில்லை.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2009 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த பாளி மொழி கதை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு அச்சிடும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 05 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு புத்தசாசன நிதியத்திற்கு புத்தகங்கள் ஒப்படைக்கப்படாத காரணத்தால் செயற்திட்டத்திற்கு முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,080,165 தொகை இதுவரை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2007 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை பாளி மற்றும் பௌத்த பல்கலைக்கழகத்திற்குச் செலுத்த வேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் ரூபா 325,000 தொகையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்காக சான்றுகளின்மை

(அ) மீளாய்வாண்டின் போது நிதியத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 20,718,390 கூட்டுத்தொகையான நன்கொடைகள் மற்றும் புத்தக விற்பனை

வருமானம் என்பவற்றிற்காக முறையாக பற்றுச்சீட்டுக்களை வழங்காமல் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. முறைப்படி பற்றுச்சீட்டுக்களை வழங்கும் நடைமுறையொன்று இல்லாததன் காரணமாக அனைத்துப் பெறுவனவுகளும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதா என கணக்காய்வின் போது உறுதிப்படுத்துவதற்கு முடியவில்லை.

(ஆ) கணக்குகளில் கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | 2013 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய இளம் பிக்குகளுக்கான நிறுவனக் கொடுப்பனவு | 632,500 | செலுத்த வேண்டிய படிகள் மற்றும் செலுத்தப்பட்ட படிகள் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | செலுத்த வேண்டிய வட்டி – தாதுமலு விஹாரை | 107,217 | பொறுப்பொன்றாக இனங் காண்பதற்குரிய பதிவேடுகள் மற்றும் கணிப்பிடல் விபரங்கள். |
| (iii) | விற்பனைக்கான புத்தகங்கள் | 8,248,169 | மெய்மையாய்வு சபை அறிக்கைகள்/ பொறுப்பில் உள்ளமைக்கான சான்றுகள்/ இருப்புப் புத்தகங்கள். |
| (iv) | பெறவேண்டியவை – புத்தக விற்பனை வருமானம் | 3,696,211 | உறுதிப்படுத்தல் பதிவேடுகள் |
| (v) | பெறவேண்டிய திறைசேரி உண்டியல் | 2,031,609 | முதலீட்டுச் சான்றிதழ்கள், முதலீட்டுப் பேரேடு, விரிவான பட்டோலைகள் |

### 2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் என்பவற்றுடன் இணங்காமைகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1990 இன் 35 ஆம் இலக்க புத்தசாசன நிதியச் அதிகாரச்சட்டம் : | |
| | (i) 4.1 ஆம் பிரிவு | கட்டுப்பாட்டுச் சபைக்கு ஒத்துழைப்பு வழங்கவும் ஆலோசனை வழங்கவும் மதியுரைக் குழுவொன்று நியமிக்கப் பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | (ii) 6 ஆம் பிரிவு | 2004 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சுனாமி அனர்த்தினால் சேதமடைந்த விஹாரைகளை கட்டியெழுப்பு வதற்காக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 1,348,796 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையில் உரிய செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| | (i) நிதிப் பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டிருந்த போதும் சமர்ப்பிக்கப்படாத ஆறு மாதங்களைக் கடந்த ரூபா 147,800 ஆன 14 காசோலைகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப் பிரமாணம் 754 | நிதியத்தினால் பொருட் பதிவே டொன்று நாளதுவரையாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) நிதிப் பிரமாணம் 756 | நிதியத்திடமிருந்த போதணை புத்தக இருப்புக்கள் தொடர்பாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய இல பீஎப்.423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | |
| | (i) 4.1(அ),(ஆ),(இ) பந்திகள் | சுற்றிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியத்தின் நோக்கங்களுக்கு இணங்க பாதீடொன்றை தயாரித்து உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் நிதியத்தின் செலவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| | (i) 4.2 (ஈ) பந்தி | வங்கிக் கணக்குகள் இணக்கம் செய்யப்பட்டு செயன்முன்னேற்றம் தொடர்பாக ஒவ்வொரு காலாண்டிற்குமான அறிக்கை அரச நிதிப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 41,981,227 மிகையாக இருந்தது. அதற்கு நேரொத்த ஒத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 27,725,095 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவில் ரூபா 14,256,132 அதிகரிப்பு தென்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

புத்தசாசன நிதியத்தின் நிர்வாக சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் பாளி கதை புத்தகங்கள் மற்றும் ஏனைய பௌத்த புத்தகங்களை சிங்களத்திற்கு மொழி பெயர்த்தல், அச்சிடல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகள் தனியார் அச்சகமொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) பௌத்த நூல்களை மொழி பெயர்த்தல், அச்சிடல் மற்றும் விற்பனை செய்தல் தொடர்பாக 2006 சனவரி 25 ஆம் திகதிய 08 ஆம் இலக்க கொள்வனவு வழிகாட்டிக்கோவையின் 3.2 பிரிவின் பிரகாரம் விலைகோரல் மேற்கொள்ளாமல் தனியார் நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்காக 2009 முதல் 2011 ஆம் ஆண்டு வரை 03 ஆண்டு காலப்பகுதியில் ரூபா 8,569,440 தொகை முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) மொழி பெயர்த்த மற்றும் அச்சிடப்பட்ட நூல்கள், மற்றும் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை, எஞ்சிய நூல்களின் எண்ணிக்கை, வெவ்வேறாக இனங்காணக்கூடிய வகையில் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புத்தசாசன நிதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிதிய வருமானம் வருமான வரியிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், நிதியத்திற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமான அடிப்படையில் மீளாய்வாண்டில் தேசிய சேமிப்பு வங்கியால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா 47,000 தொகை உட்பட ரூபா 394,381 ஆன நிறுத்தி வைத்தல் வரியை மீண்டும் மீள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இளம் பிக்குகளுக்கான நிறுவனங்களுக்கு மாதாந்த படிகள் கொடுப்பனவு தொடர்பாக பின்வரும் பலவீனங்கள் மற்றும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) இளம் பிக்குகளுக்கான நிறுவனங்களுக்கான கொடுப்பனவு பதிவேடு பராமரிக்கப்பட்டிருந்த போதிலும், அதனை முறையாக நாளதுவரையாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது 8 இளம் பிக்குகளுக்கான நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 285,000 படிகள் செலுத்தப்படாமல் இருந்தன.

### 4.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

இளம் பிக்கு கெப்கறு பங்களிப்பு முறைமைக்குரிய ரூபா 28 மில்லியன் முதலீட்டிலிருந்து கிடைக்கின்ற வட்டி வருமானத்தைப் பயன்படுத்தி இளம்பிக்கு கெபகறு பங்களிப்பு முறைமையை செயற்படுத்த வேண்டியிருந்த போதிலும், முன்னைய ஆண்டு உட்பட மீளாய்வாண்டின் போதும் உரிய வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் மேற்குறித்த முதலீட்டிலிருந்து ரூபா 3,502,809 ஆன வருடாந்த வட்டி வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதிலும், முறையான திட்டமொன்று காணப்படாமையால் இளம் பிக்கு கெபகறு பங்களிப்பு முறைமைக்கு ரூபா 383,675 தொகை அல்லது 11 சதவீமே பங்களிப்புச் செய்யப்பட்டிருந்தது.

### 4.4 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 12 செயற்திட்டங்களுக்காக நிதியத்திற்கு நன்கொடையாக கிடைத்த ரூபா 1,448,096 தொகை 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளுக்கோ அல்லது நிர்வாக சபையின் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகளுக்கோ பயன்படுத்தாமல் செயலற்றுக் காணப்பட்டது.

(ஆ) 2007 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்படும் ரூபா 15,000 ஆன சிவ்பஸ உதவிக் கணக்கின் மீதி 2008 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்படும் ரூபா 1,348,796 ஆன சுனாமி நன்கொடைகள் கணக்கின் மீதியும் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் செயலற்றுக் காணப்பட்டன.

### 4.5 வெளிப்படையான மோசடிகள்

நிதியத்தின் முன்னாள் கணக்காளரால் 2012 ஆம் ஆண்டின் மே மாத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் வரை 04 மாத காலப்பகுதிக்காக நிர்வாக சபையால் கொடுப்பனவு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட மாதமொன்றிற்கான ரூபா 8,926 வீதப்படியான படிகளுக்கு பதிலாக நிர்வாக சபையின் அங்கீகாரத்திற்கு முரணாக மாதமொன்றுக்கு ரூபா 42,302 வீதம் பெற்றுக்கொண்ட காரணத்தினால் ரூபா 133,504 கூடுதலாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப் 423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.3 பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 2 மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்கள், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 05

ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அக்கணக்குகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்படாமை தொடர்பாக கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னர் மீண்டும் 2014 யூலை 23 ஆம் திகதி வரைவு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், திருத்தப்பட்ட கணக்குகள் 2014 ஒக்தோபர் 31 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 கூட்டுத்திட்டம்**

நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டினை மேவுகை செய்யக்கூடிய வகையில் கூட்டுத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 செயல் நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நிர்வாக சபைக்கு 2013 திசெம்பர் 03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அத்திட்டத்தின் பிரகாரம் மூன்று செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்த போதும் பௌதீக செயலாற்றலில் 2 செயற்திட்டங்கள் தொடர்பாக மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது.

**5.4 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டின் போது நிதியத்தில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிதியத்தின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், கீழே காட்டப்பட்டுள்ள கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(ஆ) நிதிய முதலீடுகள் மற்றும் பயன்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) புத்தகங்கள் அச்சிடல், களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை
(ஈ) சொத்துக்கள்
(உ) பாதீடு